சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

# கணக்கீடு – 33 தரம் - 13

## Covid – 19 இடர் விடுமுறைகால பயிற்சி

## தேர்ச்சி 14 – கூலிக் கிரயம்

Week : Sep 20 – 24
இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி

தயாரிப்பு : சஜித்.sp
BBA(Financial Spl), University of Colombo

### ஊழியர் சேமலாப நிதியம் (EPF)

★ ஊழியர்களின் சேவைக்கால முடிவில் அவர்களின் வாழ்வாதாரத்தை கொண்டு நடாத்தக்கூடிய வகையில் வழங்கப்படும் ஓர் நிதிரீதியிலான ஊக்குவிப்பு வசதியே ஊழியர் சேமலாப நிதியம் எனப்படும்.

★ ஊழியர்களது அடிப்படை சம்பளத்தில் ஊழியர்கள் 8% அல்லது 12% மும், தொழில் தருநர் 10% அல்லது 15% மும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்ககளிப்புச் செய்தல் வேண்டும்.

★ **ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர்களின் பங்களிப்பிற்கான இரட்டைப் பதிவு**

.....................................................................................................................

.....................................................................................................................

★ **ஊழியர் சேமலாப நிதியத்திற்கு தொழில் வழங்குனரின் பங்களிப்பிற்கான இரட்டைப் பதிவு**

.....................................................................................................................

.....................................................................................................................

### ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF)

ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு தொழில் தருனர் ஊழியரின் அடிப்படை சம்பளத்தில் 3% இனை பங்களிப்புச் செய்வர்.

★ **ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு தொழில் வழங்குனரின் பங்களிப்பிற்கான இரட்டைப் பதிவு**

.....................................................................................................................

.....................................................................................................................

1. நிறுவனமொன்றில் கடமை புரியும் ஊழியர்களுக்கு 2021 மே மாத முடிவில் ரூபா 720 000 தேறிய சம்பளமாக செலுத்தப்பட்டது. இத்தொகையானது ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதி 10% நீக்கி செலுத்தப்பட்டதாகும். ஊழியர் சேமலாப நிதிக்கு நிறுவனம் 15% பங்களிப்பும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு நிறுவனம் 3% பங்களிப்பும் செய்தல் வேண்டும்.
   1. மே மாத சம்பளம் யாது?
   2. ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதிக்குரிய இரட்டைப் பதிவு
   3. நிறுவனத்தின் ஊழியர் சேமலாப நிதிக்குரிய இரட்டைப் பதிவு
   4. நிறுவனத்தின் ஊழியர் நம்பிக்கை நிதிக்குரிய இரட்டைப் பதிவு
   5. 2021 மே மாதத்திற்கு ஊழியர் தொடர்பான மொத்த செலவு